the global voice of
the legal profession®



# ஒரு நம்பகத்தன்மைப் பிரச்சினை: பிரதமபிரதம நீதியரசர் பண்டாரநாயகவின் மீதான குற்றச்சாட்டும் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியின் தேய்நிலையும்

விவரச்சுருக்க அறிக்கை

**மார்ச் 2013**

International Bar Association's Human Rights Institute (சர்வதேச வழக்கறிஞர் சங்கத்தின் மனித உரிமைகள் கழகத்தின், IBAHRI)

இந்த அறிக்கை லுண்ட்-இலண்டன் வழிகாட்டுநெறிகள் 2009இன்படி
(**www.factfindingguidelines.org**)

இந்த அறிக்கையில் உள்ளவை தாராளமாக மேற்கோள் காட்டப்படலாம் அல்லது மறுபிரசுரம் செய்யப்படலாம்,
ஆனால் International Bar Association (சர்வதேச வழக்கறிஞர் சங்கத் கழகம், IBA)  உசாத்துணையாகக் குறிப்பிடப்பட வேண்டும்

**International Bar Association**
4th Floor, 10 St Bride Street
London EC4A 4AD, United Kingdom
தொ.பே.: +44 (0)20 7842 0090
தொலைநகல்: +44 (0)20 7842 0091
இணையத்தளம்: **www.ibanet.org**

# ஒரு நம்பகத்தன்மைப் பிரச்சினை: பிரதம நீதியரசர் பண்டாரநாயகவின் மீதான குற்றச்சாட்டும் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியின் தேய்நிலையும்

## விவரச்சுருக்க அறிக்கை

இலங்கை ஒரு அரசியலமைப்புப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. 14 ஆண்டுகளாக மீயுயர் நீதிமன்றத்தில் பணியாற்றிவந்த ஒரு பெண்மணியான இலங்கையின் 43ஆம் பிரதம நீதிபதி, அந்நாட்டின் முறையீட்டு நீதிமன்றத்தின் தெளிவானதொரு தீர்ப்பிற்கு விரோதமாக அந்நாட்டின் பாராளுமன்றத்தாலும் ஜனாதிபதியாலும் நீக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசில் பல்லாண்டு காலம் சேவையாற்றிய, மிகச் சமீபத்தில் தலைமை வழக்கறிஞராகவும் அமைச்சரவைக்குச் சட்ட ஆலோசகராகவும் இருந்த ஒரு வழக்கறிஞரைத் பிரதமபிரதம நீதியரசர் பண்டாரநாயகவுக்குப் பதிலாக அமர்த்தியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இதற்கிடையில், அவர் நீக்கப்படுவதை எதிர்த்தவர்கள், அடையாளம் தெரியாத நபர்களால் தொந்தரவுக்கும் அச்சுறுத்தலுக்கும் கொலை மிரட்டல்களுக்கும் ஆளாகியிருக்கிறார்கள். இது நிருவாகத் துறை நீதித் துறை மீது பல்லாண்டு காலமாக நடத்திவரும் ஆக்கிரமிப்பின் தொடர்ச்சி. அரசை விமர்சிப்பவர்களின் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவந்துள்ள தாக்குதல்கள், ஆள்கடத்தல்கள், கொலைகள் ஆகியவற்றின் தொடர்ச்சி. இவை குறித்துப் புலனாய்வு நடத்தப்படுவது அரிது, இவற்றுக்காக வழக்கு தொடுக்கப்படுவதேயில்லை.

இந்தப் பின்னணியில், பிரதம நீதியரசர் பண்டாரநாயகவின் நீக்கம் வெறும் அரசியல் சச்சரவு அல்ல; அது முன்பே வலுவிழந்திருக்கும் இலங்கையின் சட்டத்தின் ஆட்சி குறித்த மக்கள் நம்பிக்கையைக் குறைக்கிறது, அரசியலமைப்பு உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் தன்னிச்சையான அதிகாரிகள் என்ற நாட்டின் நீதிபதிகளின் அதிகாரத்தை ஒழிப்பதாக அச்சுறுத்துகிறது. International Bar Association's Human Rights Institute (சர்வதேச வழக்கறிஞர் சங்கத்தின் மனித உரிமைகள் கழகத்தின், IBAHRI) பார்வையில், பண்டாரநாயகவை வெளியேற்ற வேண்டும் என்ற முடிவு, அதிகாரப் பிரிப்பு, சட்டத்தின் ஆட்சி, நல்ல ஆட்சி, மனித உரிமைகள் ஆகியவற்றுக்கான மரியாதை உள்ளிட்ட பொதுநலவாய நாடுகளின் பிரதான விழுமியங்கள் மற்றும் கொள்கைகளுக்குப் பொருந்தாமலும் உள்ளது. சமீபத்தில் பிரகடனம் செய்யப்பட்ட பொதுநலவாயப் சமவாயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் காரணத்திற்காக, நவம்பர் 2013இல் இலங்கையில், கொழும்பில் நடைபெறத் தற்போது திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய அரசுத் தலைவர்கள் சந்திப்பிற்கான ஏற்பாடுகளை எப்படிச் செய்வது என முடிவு செய்யும்போது இந்த அறிக்கையை, குறிப்பாக 9-10 வரையிலான அதன் பரிந்துரைகளை (பக்கம் 10), கவனமாகப் பரிசீலிக்கும்படி பொதுநலவாயத்தை IBAHRI கேட்டுக்கொள்கிறது.

### IBAHRI அறிக்கை

இந்த அறிக்கை, இந்நிகழ்வுகளுக்கான ஒரு துரித எதிர்வினையாக IBAHRIஆல் பிரசுரிக்கப்படுகிறது. இந்த அறிக்கையானது பின்வருவோர் அடங்கிய ஒரு பிரதிநிதிக் குழுவால் எழுதப்பட்டுள்ளது: நைஜீரியக் குடியரசின் முன்னாள் பிரதம நீதியரசரான மேதகு ஜஸ்டிஸ் முகம்மது லவல் உவைஸ்; நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் தன்னிச்சைக்கான முதல் ஐக்கிய நாடுகள் (UN) சிறப்பு சார்பதிவாளர் டத்தோ பரம் குமாரஸ்வாமி; பிரித்தானிய வழக்குரைஞரும் இலக்கு சார்பதிவாளருமான சதக்கத் கத்ரி; IBAHRI திட்ட வழக்கறிஞரான ஷேன் கீனன்.

இது இரண்டாம் முறையாக அமைக்கப்பட்டுள்ள ஒரு பிரதிநிதிக் குழு. முதலில் IBAHRI சதக்கத் கத்ரியையும் ஷேன் கீனனையும் இன்னும் இருவருடன் (இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஜே.எஸ். வர்மா, பிரித்தானிய பிரபுக்கள் சபையைச் சேர்ந்த கோமகள் உஷா குமாரி பிரஷார் ஆகியோர்) அனுப்பத் திட்டமிட்டது. ஆனால் எல்லோருக்கும் இலங்கைக்குள் நுழைய விசா மறுக்கப்பட்டது. இலங்கை அரசுடனான இந்தச் சிரமத்திற்குத் தீர்வுகாண IBAHRI மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை, எனவே தற்போதுள்ள பிரதிநிதிக் குழுவின் உறுப்பினர்கள் இந்த

அறிக்கையை தொலைவிலிருந்து ஆராய்ச்சி செய்து இந்த அறிக்கையை எழுத வேண்டியிருந்தது. இத்தகையதொரு சூழ்நிலை இதற்கு முன்பு ஒரே ஒரு முறைதான் ஏற்பட்டுள்ளது. 2008இல் ஃபிஜி அப்போது ஏற்பட்டிருந்த ஒரு இராணுவப் புரட்சியின் சட்டபூர்வப் பின்விளைவுகள் குறித்து IBAHRI புலனாய்வு செய்ய அனுமதியளிக்க மறுத்தது. இருப்பினும் அந்தத் தருணத்தில், அதன் பிரதிநிதிக் குழு ஓர் அறிக்கையை எழுதியது. அந்த அறிக்கை 2009இல் பொதுநலவாயத்தில் ஃபிஜி இடைநிறுத்தம் செய்யப்படுவதற்குச் சிறிது காலம் முன்பு பிரசுரிக்கப்பட்டது.

IBAHRI இலங்கைக்குச் செல்ல இயலாமல்போனது ஏற்பாடுகள் சார்ந்த சில எதிர்பார்க்கத்தக்க சிரமங்களை ஏற்படுத்தியது; தலத்தில் உள்ள, அக்கறை கொண்ட தரப்புகளுடன் அதன் பிரதிநிதிக் குழுவால் பேச இயலவில்லை. இருப்பினும், நாட்டிலுள்ள நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், குடிமைச் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உட்பட கிட்டத்தட்ட 20 முக்கியத் தனிநபர்களுடன் தொலைபேசி மூலமும் இணையம் வழியாகவும் தொடர்ச்சியாகப் பல ஆழமான உரையாடல்களை நடத்தியது. இலங்கை அரசும் பங்கேற்க அழைக்கப்பட்டது, ஆனால் அது IBAHRIஇன் நேர்காணல் வேண்டுகோள்களை அங்கீகரிக்க மறுத்தது.

இந்த அறிக்கை இரு பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிறது: பிரதம நீதியரசர்பண்டாரநாயகவின் நீக்கம் (அத்தியாயம் இரண்டு); இலங்கையின் சட்டத் தொழிலின் அபாயகரமான நிலை (அத்தியாயம் மூன்று). இவ்விரு பிரச்சினைகளும் நெருக்கமான தொடர்புள்ளவை என்பது வெளிப்படையானது. நீதித் துறை சார்ந்த சுதந்திரமும் சட்டத்தை மனசாட்சியுடன் பின்பற்றுதலும் பத்தாண்டுகளுக்கும் மேலாக நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிவந்திருக்கின்றன. மே 2009இல் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) மீதான வெற்றி, பலர் எதிர்பார்த்தபடி அரசின் சமநிலையை மீட்டெடுக்கவில்லை. உண்மையில் நிருவாகத் துறையினரின் ஆக்கிரமிப்புகள் அதிகரிக்கத்தான் செய்தன. எனவே பிரதம நீதியரசர்முறையின்றி நடத்தப்பட்ட நிகழ்வு, முன்பே சட்டத்தின் ஆட்சிக்குக் கடும் சேதத்தை ஏற்படுத்தியுள்ள ஒரு நிகழ்முறையின் இறுதிவிளைவாகப் பார்க்கப்பட வேண்டும்.

### *அரசியலமப்புப் பின்னணி*

1978இல் இலங்கையின் அரசியலமைப்புசெயல்படுத்தப்பட்டது முதல், நீதிபதிகளுக்கு நிருவாகத் துறையினர், சட்டமன்ற அமைப்பு, மற்றும் நீதிமன்ற அமைப்பிலேயே உள்ள மேலதிகாரிகளிடமிருந்தான நிர்ப்பந்தத்திலிருந்து அது போதுமான பாதுகாப்பு அளிக்கவில்லை என்பதான கவலைகள் இருந்துவந்திருக்கின்றன. அவர்களது பதவிக்காலத்தின் பாதுகாப்பு, குறிப்பாக நீதித் துறை அதிகாரிகளின் நியமனம், இடமாற்றல், ஒழுங்குபடுத்தல், நீக்கம் ஆகியவற்றுக்கான நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மையும் பதிலளிக்கும் பொறுப்பும் இல்லாததால் பலவீனப்படுத்தப்பட்டது.

இந்தப் பாதுகாப்பு நிலைகள் இல்லாமை, 2001இல் முதல் முறையாக இலங்கைக்குச் சென்றபோது IBAHRIக்கு மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாக இருந்தது. அதன் பின்பு அரசியலமைப்பிற்குசெய்யப்பட்ட 17ஆம் திருத்தம், சிரேட்ட நீதிபதிகள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளிட்ட முக்கியமான அரசு அதிகாரிகளை நியமிப்பதற்கான ஒரு தன்னிச்சையான அரசியல் அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட வழிசெய்தது. ஆனால் 2005க்குப் பின்பு இந்த அமைப்பு செயலற்றுக் கிடக்க விடப்பட்டது. 2009இல் எழுதப்பட்ட IBAHRIஇன் இரண்டாம் இலங்கை அறிக்கை இதை 'நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு உள்ள மிக அதிமுக்கியமான தீர்வுகாணப்படாத பிரச்சினைகளில் ஒன்று' எனக் கருதியது.

தற்போதுள்ள பிரச்சினை, இந்த மோசமாகச் செயல்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாட்டைக்கூட நீக்குவதற்கு நடப்பு அரசு மேற்கொண்ட ஒரு நடவடிக்கையால் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் தேர்தலில் மீண்டும் ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் (United People's Freedom Alliance - UPFA) செப்டம்பர் 2010இல் செயல்படுத்தப்பட்ட இலங்கை அரசியலமைப்பு 18ஆம் திருத்தம், இலங்கையின் அனைத்து அதிமுக்கிய அதிகாரிகள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு உட்பட எட்டு அமைப்புகளின் உறுப்பினர்கள், மீயுயர் நீதிமன்றம் மற்றும் முறையீட்டு நீதிமன்றத்தின் எல்லா நீதிபதிகள் ஆகியோரையும் நியமிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எல்லையற்ற அதிகாரத்தை அளித்தது. அது செயல்படுத்தப்பட்டது நாட்டின் அரசியலமைப்பு ஒழுங்குகளின் சமநிலையைக் குறிப்பிடத்தக்க அளவு குலைத்திருக்கிறது; உண்மையில் நிர்வாகத் துறையினரை ஆய்வுக்குட்படுத்தி நீதிபதிகளின் நடுநிலைக்கு உத்தரவாதம் அளிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இயங்கமைப்புகளை இதன் மூலம் மேலும் சீரழித்திருக்கிறது.

## *பிரதம நீதியரசர்பண்டாரநாயகவின் நீக்கம்*

பிரதம நீதியரசர்பண்டாரநாயக, அரசுக்கு எதிராகத் தீர்ப்புகள் அளித்த இரு மீயுயர் நீதிமன்றக் குழுக்களுக்குத் பிரதம தாங்கிய பின்பு நீக்கப்பட்டார். பல சாட்சிகள் அளித்த வாக்குமூலங்கள், அதுதான் இலங்கை அரசு அவரை நீக்க முடிவுசெய்யக் காரணம் என்று IBAHRIக்கு சந்தேகத்திற்கிடமின்றித் தெளிவுபடுத்தியுள்ளன. இதையடுத்து ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழு (‘குழு’) ஒரு விசாரணையை நடத்தியது. இவ்விசாரனை பொருத்தமான நடைமுறை விதிகளை (நிலை ஆணை 78A) பின்பற்றி நடத்தப்பட்டதாகக் காட்டப்பட்டாலும், அவசரமாகவும் இரகசியமாகவும் இயற்கை நீதியின் கொள்கைகளுக்கு மாறாகவும் நடத்தப்பட்டது. அவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்க வாக்களித்தோரில் பெரும்பான்மையினர் அனைவரும் அவரை நீக்குவதற்கு முயற்சி மேற்கொண்ட கட்சியின் உறுப்பினர்கள்; அவர்கள் அனைவரும் அரசில் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் இருந்தார்கள். வெளிப்படையான, ஒளிவுமறைவற்ற நடைமுறைகள் வேண்டும் என்று அவர் பலமுறை கோரியும் அவர்கள் அதை நிராகரித்தார்கள். அவரது வழக்கறிஞர்களுக்கு முதல் முறையாக ஆவண ஆதாரம் - 989 பக்கங்கள் - காண்பிக்கப்பட்டபோது, முறையான விசாரணை மறுநாள் தொடங்கும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. பிரதம நீதியரசர்எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தார், விரைவில் குழுவின் நான்கு எதிர்த் தரப்பு உறுப்புனர்களும் வெளிநடப்பு செய்தார்கள். பின்னர் பெரும்பான்மையினர் அவர்கள் இல்லாதபோது 16 சாட்சிகளை விசாரித்தார்கள். 12 மணிநேரத்திற்குக் குறைவான காலத்திற்குப் பின்பு, அவரைப் பதவியிலிருந்து நீக்குமளவிற்குத் தீவிரமான நடத்தைப்பிறழ்வில் ஈடுபட்டதாகக் கூறும் ஒரு 35 பக்க அறிக்கையைக் குழு தயாரித்துவிட்டிருந்தது.

இந்த விசாரணை அடிப்படையிலேயே குறைபாடுள்ளதாக IBAHRI கருதுகிறது: அது உண்மையிலும் பார்வையிலும் தன்னிச்சையாக நடத்தப்படவில்லை; குற்றம்சாட்டப்பட்டவர் குற்றம் செய்யாதவராக இருக்கக்கூடும் என்ற அனுமானிக்கத் தவறியது; பிரதம நீதிபதிக்கு எதிராகப் பயன்படுத்தப்படவிருந்த ஆதாரத்தைப் பற்றிப் போதுமான அவகாசம் அளிக்காமல் தெரியப்படுத்தியது; முறையின்றி இரகசியமாக நடத்தப்பட்டது. இது பொதுச் சட்டத்திற்கும் இலங்கையின் அரசியலமைப்பிற்கு மட்டுமின்றி, குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச ஒப்பந்தம், அரசின் மூன்று கிளைகள் குறித்த பொதுநலவாய (லாட்டிமர் சபை) கொள்கைகள் (‘லாட்டிமர் சபை வழிகாட்டுநெறிகள்’) உட்படஉட்பட இலங்கை பற்றுறுதி கொண்டுள்ள சர்வதேசச் சட்டக் கடப்பாடுகளுக்கும் சாரமாக உள்ள இயற்கை நீதியின் விதிகளை மீறியது.

## *இலங்கையின் சட்டத்தின்படி இந்த நடைமுறையின் சட்டவிரோதத் தன்மை*

குழு தனது முடிவை மேற்கொள்ளும் நடவடிக்கையில் இருந்தபோது, பிரதம நீதியரசர்பண்டாரநாயகவின் சார்பாகச் செயல்பட்ட வழக்கறிஞர்கள் முறையீட்டு நீதிமன்றத்திடம் நிவாரணம் கோரியது. முறையீட்டு நீதிமன்றம் 7 ஜனவரி 2013 அன்று ஒரு முடிவைச் சமர்ப்பிப்பதற்கு முன்பு மீயுயர் நீதிமன்றத்திடம் அரசியலமைப்புதொடர்பான ஒரு கேள்வி குறித்துக் கருத்து கேட்டது. இந்த முடிவு, குழுவின் நடைமுறைகள் சட்ட ரீதியாகக் குறைபாடுள்ளவை என்றும், அதனால் பிரதம நீதியரசர்குற்றவாளி என்ற அதன் தீர்மானம் செல்லுபடியாகாது என்றும் தீர்ப்பளித்தது. இருந்தாலும் நான்கு நாட்களுக்குப் பின்பு பாராளுமன்றம் அவரை நீக்க முடிவுசெய்தது. அதன் பின்னர் ஜனாதிபதி நீக்க ஆணை ஒன்றில் கையொப்பமிட்டு உடனடியாகப் புதிதாக ஒரு பிரதம நீதிபதியை நியமித்தார். IBAHRIஇன் கருத்துப்படி, முறையீட்டு நீதிமன்றம், மீயுயர் நீதிமன்றம் ஆகியவற்றின் கூட்டு அதிகாரத்தின் பலத்தில் அமைந்த இலங்கைச் சட்டத்தின் தெளிவானதொரு வெளிப்பாட்டை அலட்சியப்படுத்தும் இந்த முடிவு, பிரதம நீதியரசர்நீக்கப்பட்டதன் சட்டவிரோதத் தன்மையை மேலும் தீவிரமாக்குகிறது.

## *ஒப்பீட்டு நிகழ்முறைகளும் சர்வதேசத் தரநிலைகளும்*

பிரதம நீதியரசர்பண்டாரநாயகவை நீக்கப் பயன்படுத்தப்பட்ட நடைமுறை இலங்கைச் சட்டத்தை மீறியது மட்டுமின்றி, தொடர்பான சர்வதேச வழக்கங்களையும் அலட்சியப்படுத்தியது அல்லது மீறியது. 1 ஏப்ரல் 2011 அன்று ஐ.நா. பொதுச் சபையால் உறுதிப்படுத்தப்பட்டபடி, ‘மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, நல்ல ஆட்சி, ஜனநாயகம் ஆகியவற்றின் பாதுகாப்பு’க்கு நீதிபதிகள் தன்னிச்சையாகவும் நடுநிலையாகவும் இருப்பது இன்றியமையாதது; இலங்கையின் சமீபத்திய செயல்கள் குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச ஒப்பந்தம், நீதிபதிகளின் சுதந்திரம் குறித்த ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், நீதிபதிகளின் சுதந்திரம் குறித்த பெய்ஜிங் கொள்கைக் கூற்று, நீதிபதிகளின்

சுதந்திரத்திற்கான சர்வதேச வழக்கறிஞர் சங்கத்தின் குறைந்தபட்சத் தரநிலைகள் ஆகியவற்றைத் தெளிவாக மீறியுள்ளன. IBAHRI குறிப்பாக அரசின் மூன்று கிளைகள் குறித்த பொதுநலவாயக் கொள்கைகளையும் அவற்றில் உள்ள லாட்டிமர் சபை வழிகாட்டுநெறிகளையும் இலங்கை அவமதிப்பது குறித்துக் கவலையடைந்திருக்கிறது. இவை மற்ற விஷயங்கள் மட்டுமின்றிப் பின்வருவனவற்றையும் கூறுகின்றன:

- 'எந்த ஒழுங்குமுறை நடைமுறைகளும் நியாயமாகவும் பாரபட்சமின்றியும் நடத்தப்பட வேண்டும். ஒரு நீதித்துறை அதிகாரியின் நீக்கத்தை விளைவிக்கக்கூடிய எந்த ஒழுங்குமுறை நடவடிக்கைகளும் நியாயத்தை உறுதிப்படுத்துவதற்கான தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.'
- 'ஒரு நீதிபதி நீக்கப்படும் அபாயம் இருக்கும் சூழல்களில், குற்றச்சாட்டுகள் முழுமையாகத் தெரிவிக்கப்படுவதற்கும் ஒரு விசாரணையில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்கும் முழு பிரதிவாதத்தையும் அளிப்பதற்கும் தன்னிச்சையான, நடுநிலையான ஒரு நடுவர் மன்றத்தால் மதிப்பிடப்படுவதற்கும் அந்த நீதிபதிக்கு உரிமை இருக்க வேண்டும்.'

## *அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ள ஒரு மீயுயர் நீதிமன்றம்*

பிரதம நீதியரசர்பண்டாரநாயக நீக்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளாகவே ஜனாதிபதி ராஜபக்ஷ அவருக்குப் பதிலாக ஒருவரைத் தாமே தேர்ந்தெடுத்து நியமித்தார். அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரான மோகன் பெய்ரிஸ் அவரது அரசுடன் மிகமிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். திரு. பெய்ரிஸ் முந்தைய ஐந்து ஆண்டுகளில் பல முக்கியமான பதவிகளை வகித்திருந்தார். மிகச் சமீபத்தில் பிரதம வழக்கறிஞர், அமைச்சரவையின் சட்ட ஆலோசகர் ஆகிய பதவிகளை வகித்தார். அவர் ஜனாதிபதியின் தயவில்தான் தமது புதிய பதவியைப் பெற்றுள்ளார் என்பது நாட்டிற்குள் நீதிபதிகளின் சுதந்திரத்திற்கு மேலும் அச்சுறுத்தலாக இருக்கிறது. இப்போது இலங்கை அரசுக்கும் மோகன் பெய்ரிஸுக்கும் 7 ஜனவரி 2013 அன்று முறையீட்டு நீதிமன்றம் மேற்கொண்ட முடிவை அலட்சியப்படுத்துவதிலும், இறுதியில் அதைத் தலைகீழாக்கிக் குற்றச்சாட்டைச் செல்லுபடியாக்குவதிலும் ஒத்த ஆர்வம் உள்ளது. இதன் விளைவாக மீயுயர் நீதிமன்றத்தின் நாணயம் முன்பே கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றன.

இன்று வரை குற்றச்சாட்டு தொடர்பான எல்லா விசாரணைகளையும் கையாளப் பொறுப்பேற்றிருக்கும் நீதிபதியான ஜஸ்டிஸ் சிராணி திலகவர்தன, பிரதம நீதியரசர்பண்டாரநாயகவைக் குற்றவாளி எனத் தீர்ப்பளித்த குழுவின் முன்பு வாக்குமூலம் அளித்தவர் என்பது IBAHRIக்குக் குறிப்பாகக் கவலையளிக்கிறது. அவரது சாட்சியம் வெறும் சந்தர்ப்ப சாட்சியம் அல்ல; குழு அது பிரதம நீதிபதியின் குற்றம் குறித்து அடைந்ததாகக் கூறிக்கொண்ட 'துல்லியமான இறுதித் தீர்மான'த்தை நியாயப்படுத்த 'மிகவும் உதவிகரமாக' இருந்ததாகக் கருதியது. நீதிபதிகள் அவர்களது பாரபட்சம் தோற்ற அளவில் மட்டுமே இருந்தாலும்கூட, அவர்கள் முன்னதாக வாக்குமூலம் அளித்த ஒரு வழக்கு தொடர்பாக எந்தப் பொறுப்பும் வகிக்கக்கூடாது என்பது சொல்லாமலே பின்பற்றப்பட வேண்டியது. பொதுச் சட்டத்திற்கு அடிப்படையானதும் நீதிபதிகளின் நடத்தைக்கான சர்வதேச வழக்கறிஞர் சங்கத்தின் குறைந்தபட்சத் தரநிலைகள், நீதிபதிகளின் நடத்தைக்கான பெங்களூர் கொள்கைகள் போன்ற சர்வதேசக் கருவிகளால் அங்கீகரிக்கப்பட்டதுமான இந்தக் கொள்கை, நீதியின் நாணயத்திற்கு அடித்தளமாகச் செயல்படுவது. இது இலங்கையின் தற்போதுள்ள மீயுயர் நீதிமன்றத்தில் பலமுறை மீறப்பட்டுவந்திருக்கிறது.

## *சட்டத் தொழிலின் அபாயகரமான நிலை*

சமீபத்திய சில ஆண்டுகளில், இலங்கையில் சட்டத்தின் ஆட்சி தேய்மானம் அடைந்துவந்திருக்கிறது. அடிப்படை உரிமைகளுக்கான மரியாதைக்கு ஆதரவாகப் பேசி அதை முன்னெடுக்கும் வழக்கறிஞர்களையும் பிறரையும் அச்சுறுத்தவும் அவதூறு செய்யவும் திட்டமிட்டு முயற்சி நடப்பது போல் தெரிகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் இருபத்தி இரண்டு பத்திரிகையாளர்களும் ஊடகச் செயற்பாட்டாளர்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர், எண்ணற்ற பலர் காணாமல் போயிருக்கிறார்கள். இந்த அறிக்கை எழுதப்பட்டுக்கொண்டிருந்தபோதுகூட, மனித உரிமைகள் வழக்கறிஞர் லக்ஷண் தியாஸ் தம்மைக் கடத்த முயற்சி நடந்ததாக சந்தேகப்பட்டதை அதிகார அமைப்புகளிடம் தெரிவித்தார்; உயர்மட்ட ஊழலைப் பற்றி எழுதிவந்த ஃபராஸ் ஷவுக்கத்தலி என்ற பத்திரிகையாளர் ஆயுதம் தாங்கிய மூன்று தாக்குதலாளர்களால் அவரது வீட்டிற்குள்ளேயே சுடப்பட்டுக் கடுமையாக காயபப்படுத்தப்பட்டார். இந்த அறிக்கை விளக்கிக் காட்டுவது போல, இந்த

வழக்குகள் எவற்றிலும் நம்பத்தக்க புலனாய்வு எதுவும் நடத்தப்படவில்லை. இலங்கை அதிகார அமைப்புகளின் உடனடி கவனத்தைக் கோருகின்ற, வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஆகியோர் மீதான 16 தீவிரக் குற்றங்களை அது அடையாளம் காட்டுகிறது.

இந்தத் தாக்குதல்கள் தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயங்கள் அல்ல; இவை பிரதம நீதியரசர்பண்டாரநாயகவின் நீக்கத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளன. அவரது நீக்கத்தை எதிர்த்து வெளிப்படையாகப் பேசிய வழக்கறிஞர்கள் மீது குறைந்தது ஏழு சம்பவங்களில் வன்முறை நிகழ்த்தப்பட்டது அல்லது நிகழ்த்துவதாக அச்சுறுத்தப்பட்டது. அதே சமயத்தில், அவரை அடுத்து நியமிக்கப்பட்டவர் தமது 33 மாதப் பதவிக் காலத்தில் வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை பாதுகாப்பாளர்கள் ஆகியோர் மீதான ஒரு குற்றத்திற்குக்கூட வழக்குத் தொடுக்காத ஒரு சமீபத்திய பிரதம வழக்கறிஞர். இந்த அறிக்கை மோகன் பெய்ரிஸ் புலனாய்வு செய்யத் தவறிய, குறிப்பாக குறைந்தது எட்டு பெரிய வழக்குகளைப் பட்டியலிடுகிறது. இவை அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், தீவைப்புகள், காணாமல் போன நிகழ்வுகள் அல்லது கொலைகள். இவற்றில் மிகப் பரவலாக அறியப்பட்ட நிகழ்வு, ஜனவரி 2010இல் பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டமை; திரு. எக்னலிகொட வெளிநாட்டில் வசிப்பதாகத் தமது அரசிடம் தகவல் இருப்பதாக மோகன் பெய்ரிஸ் சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. குழுவிடம் பகிரங்கமாகக் கூறினார், ஆனால் இலங்கையின் நீதிமன்றங்களிலேயே '[அவர்] எங்கே இருக்கிறார் என்று கடவுளுக்குத்தான் தெரியும்' என்று தெரிவித்தார். அதே போல, குறைந்தது இன்னும் ஐந்து தருணங்களில் திரு. பெய்ரிஸ் மோசடி, கடத்தல், கொலை ஆகியவை தொடர்பான முக்கியமான வழக்குத் தொடுப்புகளையும் அடிப்படை உரிமை மனுக்களையும் நிறுத்தினார். இந்த சந்தர்ப்பங்கள் அரசு அதிகாரிகளின் தனிப்பட்ட, அரசியல் ரீதியான அல்லது வணிக நலன்களுக்குச் சாதகமாக இருந்தவையாகத் தெரிந்தன.

இந்த சந்தர்ப்பங்களில், இலங்கையில் நீதிபதிகளின் சுதந்திரம் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்றால் நேர்மையான, திட்டமிட்ட சீர்திருத்தங்கள் அவசியமாகும். பொதுநலவாயப் பட்டயம் போன்ற சர்வதேசக் கருவிகள் மூலம் நல்ல ஆட்சியிலும் சட்டத்தின் ஆட்சியிலும் இலங்கை அரசு முறைசார்ந்து பற்றுறுதி கொண்டுள்ளது என்றாலும், வழக்கறிஞர்களையும் மனித உரிமை பாதுகாப்பாளர்களையும் கடும் காயம் அல்லது மரணத்திற்கான அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்கான கடந்தகாலப் பொறுப்புகளை அது நிறைவேற்றத் தவறியிருக்கிறது. இதற்கு நாச விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஏனென்றால் தண்டனையின்மை இயல்புநிலையாக, அல்லது வழமையாகக்கூட ஆகிவிட்டிருக்கும் ஓர் அரசியல் கலாச்சாரம் அதன் செயலின்மையால் வளர்கிறது.

## *முடிவுரை*

பிரதம நீதியரசர்பண்டாரநாயகவின் நீக்கத்தின் பின்விளைவுகள், தற்போதுள்ள பிரச்சினையை உருவாக்கிய சச்சரவுகளையும் தாண்டிச் செல்கின்றன. அரசியல் அமைப்பின் 18ஆம் திருத்தம் செயல்படுத்தப்பட்டதிலிருந்தே நிர்வாகத் துறை தனது அதிகாரத்தின் மீதான நிறுவன ரீதியான எல்லைகளை அழித்துவந்திருக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் நேரடியாக ஜனாதிபதியால் நியமிக்கப்படும் எந்தத் பிரதம நீதிபதிக்கும் நிர்வாகத் துறையை எதிர்த்து நீதிபதிகளுக்குத் தோள் கொடுக்கும் திறன் இருக்க சாத்தியமில்லை. இந்தக் குற்றச்சாட்டு, இலங்கைக்கு அதன் கால் நூற்றாண்டு கால உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்திருக்கக்கூடிய எந்த மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுப்பதில் உள்ள திறனை பலவீனப்படுத்தவும் செய்கிறது. இத்தகைய துஷ்பிரயோகங்களின் அளவை மதிப்பிடுவது இந்த அறிக்கையின் வீச்சிற்கு அப்பாற்பட்டது. ஆனால் ஒரு தீர்வுக்கான தேவை, கற்ற பாடங்கள் மற்றும் ஒத்திசைவு ஆணையத்தை (Lessons Learnt and Reconciliation Commission) நிறுவியதன் மூலம் இலங்கை அரசாலேயே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்வு சமீபத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையராலும் உறுதிப்படுத்தப்பட்டது. கடந்த காலக் குற்றங்கள் நியாயமாகவும் சமநிலையோடும் மதிப்பிடப்பட வேண்டும் என்றால், அத்துடன் நிலைபெறு சமாதானமும் நிலவ வேண்டும் என்றால், இலங்கைக்குப் பலனுள்ள, நிலையான ஒரு சட்ட அமைப்பு தேவை. இதற்கு நாணயமும் சுதந்திரமும் உள்ள நீதிபதிகள் அவசியம். இத்தகைய நீதிபதிகளால் இலங்கையில் தொடர்ந்து இயங்க முடியுமா என்பது முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவை மதித்துத் பிரதம நீதியரசர்பண்டாரநாயகவை மீண்டும் பணியில் அமர்த்த நடப்பு அரசு தயாராக இருக்கிறதா என்பதையே பெரிதும் சார்ந்திருக்கும்.

## பரிந்துரைகள்

IBAHRI பின்வரும் பத்து பரிந்துரைகளைச் செய்கிறது:

இலங்கையின் அதிகார அமைப்புகளுக்கு

1. இலங்கை அரசியலமைப்பிற்கும் முறையீட்டு நீதிமன்றம், மீயுயர் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகளுக்கும் ஏற்ப பிரதம நீதியரசர்பண்டாரநாயக மீதான குற்றச்சாட்டும் பதவிநீக்கமும் இரத்து செய்யப்பட உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. நிலை ஆணை 78A முன்பே செல்லாததாக இல்லாத பட்சத்தில் இரத்து செய்யப்பட வேண்டும், நீதிபதிகளுக்கான, இலங்கை அரசியலமைப்பு, பொதுச் சட்டக் கொள்கைகள், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகியவற்றை முழுமையாகப் பின்பற்றும் ஓர் ஒழுங்குமுறை நடைமுறையை உருவாக்குவது குறித்துப் பரிசீலிக்கப்பட வேண்டும். அதில் இருக்க வேண்டிய பிற அம்சங்கள் பின்வருமாறு:

   (i) ஒரு நீதிபதிக்கு எதிரான வழக்கு, தொடக்கத்தில் புகார் செய்தவர்களைச் சாராத பல்வகை நபர்கள் அடங்கிய ஒரு குழுவால் பரிசீலிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் விதிகள்;

   (ii) குற்றம்சாட்டப்படுபவர் நிரபராதியாகவும் இருக்கக்கூடும் என்ற ஓர் உத்தரவாதம்;

   (iii) சாட்சியம் குறித்த விதிகள் மற்றும் ஆதாரத் தரநிலைக்கான சட்டவிதிகள்;

   (iv) குற்றம்சாட்டப்பட்ட ஒரு நீதிபதிக்கு அந்தக் குறிப்பான குற்றச்சாட்டுகள் பற்றி உரிய நேரத்தில் தெரியப்படுத்தப்படும், பாதகமான சாட்சியம் முழுவதுமாக வெளிப்படுத்தப்படும், சாட்சிகளை நேரிலோ சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பிரதிநிதிகள் மூலமாகவோ எதிர்கொள்ளவும் அழைக்கவும் உரிமை இருக்கும் என்ற உத்தரவாதங்கள்;

   (v) சம்பந்தப்பட்ட நீதிபதியின் விருப்பத் தேர்வுப்படி விசாரணைகளைப் பகிரங்கமாக நடத்தச் சட்டவிதி;

   (vi) நீதிபதிகள் மீதான ஒழுங்குமுறை விசாரணைகள் முறையீட்டு நீதிமன்றத்தில் மீள்பார்வைக்கும் மீயுயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை விண்ணப்பங்களுக்கும் உட்பட்டவை என்பதற்கு வெளிப்படையான அங்கீகாரம்.

3. பெங்களூர் நீதிபதிகள் நடத்தைக் கொள்கைகள், லாட்டிமர் சபை வழிகாட்டுநெறிகள் உட்பட பொருத்தமான சர்வதேசக் கருவிகளில் எடுத்துக்கூறப்பட்டுள்ள கொள்கைகளை முழுமையாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நீதிபதிகளுக்கான ஒரு நடத்தை நெறி அவசர அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும்.

4. அரசியலமைப்பின் 18ஆம் திருத்தம் இரத்து செய்யப்பட வேண்டும்; ஜனாதிபதியைச் சார்ந்திராத, இலங்கையில் உள்ள எல்லா முதுநிலை அதிகாரிகள் மற்றும் நீதிபதிகளின் நியமனத்திற்கும் பொறுப்பான ஓர் அமைப்பு (இது அரசியலமைப்பு சபை என்று அழைக்கப்படலாம் அல்லது அழைக்கப்படாதிருக்கலாம்) உருவாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் பொறுப்பு, அரசியலமைப்பின் புபிரிவு 41Aஇன் பகுதிகள் 1, 2 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள், நிறுவனங்கள், நீதிபதிகள் ஆகியோரையாவது, அதாவது தேர்தல் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலீஸ் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, இலஞ்சத்தையும் ஊழலையும் புலனாய்வு செய்வதற்கான நிரந்தர ஆணைக்குழு, நிதிச் சேவைகள் ஆணைக்குழு, வரம்பிடுதல் ஆணைக்குழு; பிரதம நீதியரசர் மற்றும் மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்; ஜனாதிபதி மற்றும் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்; நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்; பிரதம வழக்கறிஞர், பிரதம தணிக்கையாளர், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மேன்), பாராளுமன்றத்தின் செயலாளர் ஆகியோரை உள்ளடக்க வேண்டும்.

5. தற்போது இலங்கையில் அலட்சியப்படுத்தப்படுகிற, நீதித் துறையின் சுதந்திரம் குறித்த, லாட்டிமர் சபை வழிகாட்டுநெறிகளில் கண்டுள்ள கூற்றுகளின்படி நீதிச் சேவை ஆணைக்குழு சீர்திருத்தப்பட வேண்டும்.

6. இந்த அறிக்கையின் மூன்றாம் அத்தியாயத்தில் எடுத்துக்கூறப்பட்டுள்ள தீவிரக் குற்றத்தன்மையுள்ள, நம்பகமான வகையில் சந்தேகிக்கப்படுகிற அல்லது நிரூபிக்கப்பட்ட வழக்குகள் அனைத்திலும் சமீபத்தில் கண்டிருக்கும் முன்னேற்றத்தை இலங்கை அரசு தெரிவிக்க வேண்டும்.
குறிப்பாக, பின்வரும் சம்பவங்களில் புலனாய்வு செய்ய மற்றும்/அல்லது வழக்குத் தொடுக்க அது என்ன செய்திருக்கிறது என்பதையும், பதில் எதுவும் இல்லை என்று இல்லாத பட்சத்தில், உடனடி எதிர்காலத்தில் குறிப்பான என்ன மாற்றங்களைச் செய்ய அது முன்மொழிகிறது என்பதையும் அது தெளிவுபடுத்த வேண்டும்:

(i) 27 செப்டம்பர் 2008 அன்று மனித உரிமை வழக்கறிஞர் ஜே.சி. வெலியமுனவின் வீட்டின் மீது நடந்த கையெறிகுண்டுத் தாக்குதல்;

(ii) செப்டம்பர் 2008க்கும் ஜனவரி 2009க்கும் இடையில் மனித உரிமை வழக்கறிஞர்கள் அமிதா அரியத்ன, ஹெச். ஆர்.டி.ஜி. மெண்டிஸ் ஆகியோரால் தெரிவிக்கப்பட்ட கொலை மிரட்டல்கள் மற்றும் தீவைப்பு;

(iii) 6 ஜனவரி 2009 அன்று முகமூடி அணிந்த நபர்களின் குழு ஒன்று சிரசா டி.வி. அலுவலகங்களின் மீது குண்டு வீசிய சம்பவம்;

(iv) 8 ஜனவரி 2009 அன்று நடந்த சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை;

(v) 29 ஜனவரி 2009 அன்று செய்தித்தாள் ஆசிரியர் உபாலி தென்னக்கூன் மற்றும் அவரது மனைவி மீது நடந்த தாக்குதல்;

(vi) 7 மே 2009 அன்று அல்லது அதற்குப் பின்பு மனித உரிமைப் பணியாளர் ஸ்டீபன் சுந்தரராஜ் கடத்தப்பட்ட, கைது செய்யப்பட்ட அல்லது கொலை செய்யப்பட்ட சம்பவம்;

(vii) 1 யூன் 2009 அன்று பொடல ஜெயந்த கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவம்;

(viii) ஜனவரி 2010இல் பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் போன சம்பவம்;

(ix) அக்டோபர் 2012இல் மாவட்ட நீதிமன்ற நீதிபதியும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருமான மஞ்சுளா திலகரட்ண மீது நடத்தப்பட்ட தீவிரமான தாக்குதல்;

(x) 17 டிசம்பர் 2012 அன்று வழக்கறிஞரும் பதவிநீக்க எதிர்ப்பு செயற்பாட்டாளருமான குணரட்ண வன்னிநாயகவுக்கு விடுக்கப்பட்ட மிரட்டல்கள்;

(xi) 20 திசம்பர் 2012 அன்று முன்னாள் வழக்கறிஞர் சங்கத் தலைவர் விஜேதாசா ராஜபக்ஷ பி.சி.யின் வீட்டிற்கு வெளியே துப்பாக்கிச் சூடு நிகழ்ந்த சம்பவம்;

(xii) சமீபத்தில் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்கறிஞர் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரியவுக்கு

(xiii) ஜனவரி 2013இல் ரொமேஷ் டி சில்வா பி.சி., ஜயம்பதி விக்ரமரட்ண பி.சி., ஜே.சி. வெலியமுன, எம்.ஏ. சுமந்திரன் ஆகிய வழக்கறிஞர்களுக்கு அனுப்பப்பட்ட மிரட்டல் கடிதங்கள்;

(xiv) 23 ஜனவரி 2013 அன்று வழக்கறிஞர் நாகானந்த கொடித்துவக்கு தெரிவித்த கொலை மிரட்டல்கள்;

(xv) 15 பிப்ரவரி 2013 அன்று பத்திரிகையாளர் ஃபராஸ் ஷவுக்கத்தலி சுடப்பட்ட சம்பவம்;

(xvi) 25 பிப்ரவரி 2013 அன்று அச்சுறுத்திய மோட்டார்சைக்கிள் கும்பல் மற்றும் ஒரு வெண்ணிற வேனில் இருந்தவர்கள் தொடர்பாக மனித உரிமை வழக்கறிஞர் லக்ஷண் தியாஸ் காவல் துறையிடம் சமர்ப்பித்த முறைப்பாடு.

வெளிநாட்டு அரசுகளுக்கும் அரசு சாரா அமைப்புகளுக்கும்

7. அரசியலமைப்பின் 18ஆம் திருத்தத்தின்கீழ் நேரடியாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் அமைப்புகளுக்கு (பரிந்துரை 4இல் குறிப்பிடப்பட்டுள்ளன) உதவி அளிக்க முன்வருவதற்கு முன்பு எச்சரிக்கையைக் கடைபிடிக்க வேண்டும். இலங்கையின் வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிகளுக்கும் பயிற்சியளிக்க அல்லது வேறு வகையில் ஆதரவளிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அதிகாரப் பிரிப்புக் கொள்கையை மேலும் தேய்மானம் அடையவைக்கக் கூடாது; மாறாக, அவை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட, பிரதிநிதித்துவம் செய்கிற, நிருவாகத் துறையைச் சிறிதும் சார்ந்திராத தொழில்முறை அமைப்புகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.

8. இலங்கையின் புலனாய்வு செய்யப்படாத, மேலே பரிந்துரை 6இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை பாதுகாப்பாளர்கள் ஆகியோர் மீதான அனைத்துக் குற்றங்களும் உள்ளிட்ட பற்பல தாக்குதல்கள், ஆள்கடத்தல்கள், சித்திரவதைச் செயல்கள், கொலைகள் ஆகியவற்றுக்குத் தீர்வுகாண சர்வதேச அரசுகளும் சட்ட அமுலாக்க அமைப்புகளும் உதவக்கூடும் என்று எடுத்துக்கூற இலங்கை அரசு அழைக்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள், பொதுநலவாய தலைமைச் செயலகம், பொதுநலவாய அமைச்சுசார்ந்த நடவடிக்கைக் குழு, பொதுநலவாயத்தின் உறுப்பு நாடுகள் ஆகியவற்றுக்கு

9. மேற்கண்ட பரிந்துரைகளுக்கு ஏற்ப அமைந்த சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் இருமடங்காக்கப்பட வேண்டும், இத்தகைய சீர்திருத்தங்களைச் செயல்படுத்த சரியாக என்ன உதவி தனக்குத் தேவைப்படும் என்று தெரிவிக்க இலங்கை அரசு அழைக்கப்பட வேண்டும். நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் சுதந்திரத்திற்கான ஐ.நா. சிறப்பு சார்பதிவாளர், மனித உரிமை பாதுகாப்பாளர்களின் சூழ்நிலைக்கான ஐ.நா. சிறப்பு சார்பதிவாளர், கட்டாயத்தால் அல்லது விருப்பமற்றுக் காணாமல் போவதற்கான ஐ.நா. செயற்குழு ஆகியோரின் எதிர்கால வருகைகளையும் அவர்களுடனான ஒத்துழைப்பையும் அரசு எப்படி ஏற்பாடு செய்யும் என்று அதனிடம் குறிப்பாகக் கேட்கப்பட வேண்டும்.

10. பொதுநலவாயமானது இலங்கை அதிகார அமைப்புகள் எவ்வளவு தீவிரத்துடன் இந்தப் பரிந்துரைகளை எடுத்துக்கொள்கிறார்கள் என்பதை மதிப்பிட வேண்டும், அவை குறித்து எவ்வளவு அவசரமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று கண்காணிக்க வேண்டும், பின்வருவனவற்றை மிகவும் கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும்:

    (i) அவர்கள் அதன் சமவாயத்தில் அடங்கியுள்ள அதிகாரப் பகிர்வு, சட்டத்தின் ஆட்சி, நல்ல ஆட்சி, மனித உரிமைகள் ஆகியவற்றை மதிப்பது உட்பட அதன் முக்கிய விழுமியங்களையும் கொள்கைகளையும் மதிக்கிறார்களா என்பதை;

    (ii) இலங்கை, வரவிருக்கும் பொதுநலவாய அரசுத் தலைவர்கள் சந்திப்பை நடத்தி அடுத்த இரு ஆண்டுகளுக்குப் பொதுநலவாயத்தின் தலைவராகச் செயற்பட்டால் அதன் நற்பெயர் அதிகரிக்குமா களங்கப்படுமா என்பதை.

**International Bar Association**
4th Floor, 10 St Bride Street
London EC4A 4AD, United Kingdom
தொ.பே.: +44 (0)20 7842 0090
தொலைநகல்: +44 (0)20 7842 0091
இணையத்தளம்: **www.ibanet.org**